மாலை வேளைகளில் இந்த சிறுவர்களுக்கு தக்ஷிண ப்ராசீன ஸம்ப்ரதாய நாமஸங்கீர்த்தன பஜனையை முறைப்படி சிறிது சிறிதாக கற்றும் கொடுத்தார். மார்கழி மாதத்தின் இறுதி நாளான போகிப்பண்டிகை அன்று உள்ளூர் பாகவதர்களுடன் வெளியூர் பாகவதர்களையும் வரவழைத்து **பாலர்பஜனை பூர்த்தி விழா**வினை செவ்வனே நடைபெற ஏற்பாடுகள் செய்து கொடுத்தார்.

**பாலர் பஜனை பூர்த்தி விழா வெண்பா**

*"பக்தியொடு பாலர்தம் பஜனைக் கிரியுலா*
*தித்திக்கும் தேனமுதாய்த் திகழ்வதென்*
*உடையாளூருறையும் உத்தமர்தம் பக்தியதன்*
*கொடைமிகுந்த தன்மையென கூறு"*

**– உடையாளூர் ஸ்ரீ D.ராஜகோபால அய்யர்**

கிராமவாசிகள் பணமாகவும், பொருளாகவும் உபயமாக அளித்த நன்கொடையை வைத்து பஜனை பூர்த்தி விழா மிகவும் விமர்சையாக வருஷா வருஷம் தொடர்ந்து நடந்து வந்தது அனைவரும் அறிந்ததே. இவ்வாறு பாலர் பஜனை நடத்தி வந்த சிறுவர்கள் அனைவரும் ஸ்ரீ D. ராஜகோபால அய்யர், ஸ்ரீ D. மஹாலிங்க அய்யர் மற்றும் ஸ்ரீ M. ராமஸ்வாமி பாகவதர் ஆகியோரிடம் பஜனை ஸம்ப்ரதாயத்தை முறைப்படி நன்கு கற்றுக்கொண்டு தவறாமல் ஒவ்வொரு ஏகாதசி அன்று மாலையில் பெருமாள் கோவிலில் பஜனையும், மற்ற சில நாட்களில் வெளியூர்களிலும் பஜனையை முறையாக செய்து வந்தனர். உடையாளூர் ஸ்தல பாகவதர் என்று மருதாநல்லூர் ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் அவர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட **ஸ்ரீ S. விஸ்வநாத (அய்யர்) பாகவதர்**, உடையாளூர் **ஸ்ரீ V. பலராம பாகவதர்** மற்றும் உள்ளூர்வாசிகள் பிரதி ஏகாதசி தினம் பெருமாள் கோவிலில் ஸம்ப்ரதாய பஜனையை விடாமல் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள். **ஸ்ரீ பாலாஜி பட்டாச்சாரியார்** அவர்கள் கோவிலில் அபிஷேகம், அலங்காரம், பூஜை என்று கைங்கர்யம் செய்து கொண்டு வருவது அனைவரும் அறிந்ததே. மாதா மாதம் ஸ்வாதி நக்ஷத்திரம் அன்று ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பெருமாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் தொடர்ந்து நடந்து வருவதும் சிறப்பானதாகும். இது தவிர தமிழ்வருஷப்பிறப்பு, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி, ஸ்ரீ ஹனுமத் ஜயந்தி முதலான நாட்களிலும் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே.

## சென்னையில் உடையாளூர்

1970களில் பாலர் பஜனை செய்து வந்த சிறுவர்கள் தற்சமயம் பெரியவர்களாகி உத்தியோக நிமித்தம் சென்னையில் வசித்து வந்தாலும் **உடையாளூர் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பஜன் மண்டலி** என்று ஏற்படுத்தி ப்ரதி ஏகாதசி அன்று சென்னையில் ஒவ்வொருவர் வீட்டில் ஸம்ப்ரதாய பஜனை, டோலோத்ஸவம் என்று தொடர்ந்து நடத்தி வருகின்றனர். உடையாளூரில் நடைபெறும் ஸ்ரீராதாகல்யாண வஸந்தோத்ஸவத்திற்கு வர இயலாத சென்னை மற்றும் அருகில் உள்ள ஊர்களில் வசிக்கும் உடையாளூர்வாசிகளும், அவர்களின் உறவினர்களும், நண்பர்களும், அனுபவித்து பரமானந்தம் அடையும்வண்ணம் 1998 ஆண்டு முதல் **உடையாளூர் ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹ பஜன் மண்டலி**யினரால் மடிப்பாக்கம் **சுப்ரீம் மஹாலில்** பிரதி வருஷம், டிசம்பர் மாதம் 25ந் தேதியை ஒட்டி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்னையில் உடையாளூர் என்ற பெயரில் ஸ்ரீராதாகல்யாண மஹோத்ஸவம் மிகவும் விமரிச்சையாக நடத்தப்பட்டு வருகிறது. அனைத்து ஆஸ்திக மஹாஜனங்களும், உடையாளூரில் நடக்கும் ஸ்ரீராதாகல்யாண வஸந்தோத்ஸவத்திலும், மடிப்பாக்கத்தில் நடைபெறும் **சென்னையில் உடையாளூர் – ஸ்ரீராதாகல்யாண மஹோஸ்த்வத்திலும்** பெரும் திரளாக வந்து கலந்துக் கொண்டு பகவத் கிருபைக்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.


**லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பஜன் மண்டலி, மடிப்பாக்கம், சென்னை–600 091.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ **B. அனந்தராமன்** | மடிப்பாக்கம் | போன் : 93830 53658 |
| 2. | ஸ்ரீ **R. ராமகிருஷ்ணன்** | புழுதிவாக்கம் | போன் : 96771 64216 |
| 3. | ஸ்ரீ **B. ராமதாஸ்** | புழுதிவாக்கம் | போன் : 78119 58178 |
| 4. | ஸ்ரீ **V. வெங்கட்ராமன்** | கீழ்க்கட்டளை | போன் : 94441 43758 |
| 5. | ஸ்ரீ **V. கைலாஸம்** | பொழிச்சலூர் | போன் : 94452 78748 |
| 6. | ஸ்ரீ **R. ராமதுரை** | அம்பத்தூர் | போன் : 97910 41916 |
| 7. | ஸ்ரீ **R.சேகர்** | சூளைமேடு | போன் : 98424 35165 |
| 8. | ஸ்ரீ **R. ஜானகிராமன்** | மேற்குமாம்பலம் | போன் : 99404 84095 |
| 9. | ஸ்ரீ **V.ராகவன்** | ஆழ்வார்திருநகர் | போன் : 99400 41301 |


**rrd.udlr@abu15012018**